



நாகை மாவட்டம் நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு 40 ஆண்டுகளுக்கு பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் நேற்று முன்தினம் கப்பல் (படகு) போக்குவரத்து தொடங்கியது. நாகை துறைமுகத்தில் நடைபெற்ற விழாவில் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு , சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துணை அமைச்சர் சர்பானந்தாசோனாவால், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் கொடி அசைத்து வைத்து கப்பல் போக்குவரத்தை தொடங்கி வைத்தார்கள்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று (14.10.2023) இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு அண்ணா மிதிவண்டி போட்டிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஸ்வரய்யா ஆகியோர் உள்ளனர்.

### 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ.31.30 கோடி மதிப்பிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை!

சென்னை, அக்.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ளததிருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிர மிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் கரூர், ஈரோடு மற்றும் திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 3 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.31.30 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம், கரூர், அருள்மிகு கல்யாண பசுபதீசுவர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தோரணக்கல்பட்டியில் அமைந்துள்ள 7 ஏக்கர் 51 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. கரூர் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்ற உத்தரவின்படி, கரூர் மாவட்ட உதவி ஆணையர் திருமதி பி.ஜெயதேவி அவர்களின் முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய மதிப்பு ரூ. 22 கோடியாகும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திருவாச்சி அருள்மிகு கரிய பெருமாள் கரிய காளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 2.46 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததையடுத்து ஈரோடு மண்டல இணை ஆணையர் உத்தரவின்படி, காவல்துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.7.60 கோடியாகும்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருவாஞ்சியம் கிராமம், அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான 16 ஏக்கர் 82 சென்ட் நிலத்தினை 14 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். இந்நிலத்தினை நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வே.குமரேசன் அவர்கள் தலைமையில், திருவாரூர் உதவி ஆணையர் (கூ.பொ) திருமதி ப.இராணி அவர்கள் முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.1.70 கோடியாகும்.

ஆகமொத்தம் இன்றைய தினம் மீட்கப்பட்ட 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்பு ரூ.31.30 கோடியாகும்.

இந்நிகழ்வுகளில் திருக்கோயில் செயல் அலுவலர்கள் எல்.சரவணன், பி.எஸ்.ராஜா, மற்றும் சிறப்பு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில்

# ரூ.371 கோடி மதிப்பில் 1666 அடிச்சட்டங்கள் கொள்முதல்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!



சென்னை, அக்.15-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் பயணிகளின் பேருந்து சேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 1666 அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு :

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி ரூ.371.16 கோடி மதிப்பீட்டில் 1666 புதிய பேருந்துகளின் அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு (விழுப்புரம்-344, சேலம்84, கோயம்புத்தூர்263, கும்பகோணம் 367, மதுரை350, திருநெல்வேலி242) என மொத்தமாக நகர மற்றும் புறநகர் பேருந்து சேவைகளுக்காக 1650 அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கும், மலைவாழ் மக்களின் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் (கோயம்புத்தூர்) கழகத்திற்கு பிரத்யேகமான 16 அடிச்சட்டங்களும் ஆக மொத்தமாக 1666 அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளின் மூலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்களின் மூலமாக வழங்கப்படும் பொதுப் பேருந்து சேவைகள் நாட்டில் முதன்மையான நிலைக்கு உயர்ந்திடும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. தொழிலாளர் அணி சென்னை மாவட்டங்களின் நிர்வாகிகள் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் அறிவிப்பு!


சென்னை, அக்.15-

கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

18.10.2023 அன்று மாலை 5 மணியளவில் எழும்பூர் ஆல்பர்ட் திரையரங்கம் அருகில் உள்ள இம்பீரியல் பயாஸ் மஹாலில் கழக தொழிலாளர் அணியின் சென்னை மாவட்டங்களான சென்னை தெற்கு மாவட்டம், சென்னை கிழக்கு மாவட்டம், சென்னை மேற்கு மாவட்டம், சென்னை வடகிழக்கு மாவட்டம், சென்னை வடக்கு, சென்னை தென்மேற்கு மாவட்டங்களில் உள்ள கழக தொழிலாளர் அணியின் மாவட்ட நிர்வாகிகளான தலைவர், துணை தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் கூட்டம் எனது தலைமையில் நடைபெற உள்ளதால் மாநில துணை செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக தலைவர், முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை மாவட்டம் தோறும் அந்தந்த மாவட்ட கழக செயலாளர்களின் வழிகாட்டுதலோடு சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.


நாள்: 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி
இடம்: கிரசன்ட் மைதானம், அண்ணாநகர்

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழா முன்னிட்டு
நே.சிற்றரசு M.A.,M.Phil
மாவட்ட செயலாளர், சென்னை மேற்கு மாவட்டம்
அவர்களின் தலைமையில் நடைபெறும்
1000–நபர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும்
நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
வருகை தரும்...
இளைஞர்களின் எழுச்சி நாயகன்
மாண்புமிகு.
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
அவர்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்...
தயாநிதி மாறன் MP. — கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
அன்பகம்கலை — கழக அமைப்பு இணை செயலாளர்
மருத்துவர் நா.எழிலன் MLA. — கழக மருத்துவ அணி செயலாளர்
எம்.கே.மோகன் MLA. — தலைமை செயற்குழுஉறுப்பினர்
ந.இராமலிங்கம் MC. எஸ்.மதன்மோகன் MC. ARP.M.காமராஜ் MC.
ச.பரமசிவம் வினோத் வேலாயுதம்
நுங்கை வி.எஸ்.ராஜ் கலைகதிரவன்
மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்.
மா.பா.அன்புதுரை
பகுதி செயலாளர்
ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி தி.மு.க